திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேலை நியமனத் தடையாணை இருக்கக்கூடிய காரணத்தினால், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணிமூப்பு அடிப்படையிலே, இடஒதுக்கீடு அடிப்படையிலே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள். சம்பந்தம் இல்லை.

வினா எண் 128, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

128—

மாணவர்கள் சேர்க்கை

•23230—திரு. வி.கே. லட்சுமணன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கு 10 ஆம் வகுப்புத் தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

10 ஆம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் இப்போது நடைமுறையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்குக்கூட, 75 சதவிகிதம் மாணவர்களுக்கு இப்போது நம்முடைய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலே இடம் கிடைப்பதில்லை. அதிலேகூட, 80, 75 சதவிகிதம், பொதுவாக ஃபிட்டர், வெல்டர் போன்ற நல்ல டிரேடுகளுக்கு எல்லாம் இப்போது அவ்வளவாக இடம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை

2003 மார்ச் 28]

இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அரசு தொழிற்பயிற்சிக் கூடத்தில் கொஞ்சம் குறைந்த கட்டணத்தில் மாணவர்கள் படித்துவிட்டு, தங்களால் ஆன ஒரு குறைந்தபட்ச வேலையைப் பெறுவதற்கு அவர்கள் முயலுகிற காரணத்தினாலே, அவர்களுக்கு, பாஸ் செய்தவர்களுக்கு மட்டுமாவது இடம் கிடைக்க வழி செய்ய வேண்டும். எல்லா இன்ஸ்டியூட்டுகளிலேயும் இருக்கைகளை, இரண்டு மடங்காகவும் நீங்கள் பெருக்கலாம். ஏனென்றால் தனியார் பயிற்சிக் கூடங்கள் எல்லாம் கீற்றுக் கொட்டகைகளிலேயும், தகரக் கொட்டகைகளிலேயும் நடந்துகொண்டு, பணத்தைப் பறித்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, நீங்கள், அரசு இந்த தொழிற்பயிற்சிக் கூடங்களிலே, பொதுவாக சிவில் போன்ற எந்த டிரேடை எடுத்துக்கொண்டாலும் அந்த டிரேடுகளினுடைய சீட்டுகளை இரண்டு மடங்காகவோ அல்லது இரண்டரை அல்லது மூன்று மடங்காகவோ நீங்கள் பெருக்கி அந்த மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பினை அளிக்க முற்படுவீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொல்லி இருக்கவேண்டும். இந்தக் கேள்வியே 10 ஆம் வகுப்பில் தவறியவர்களுக்கு ஐ.டி.ஐ.-ல் இடம் தரப்படுமா என்பதுதான். அது ஏற்கனவே தரப்பட்டு வந்திருக்கிறது. எல்லா டிரேடுகளிலும் தரப்படுகின்றன. SCVT-லும், NCVT-லும் தரப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இடம் கிடைக்கவில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால், எல்லாவிதமான டிரேடுகளிலும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அப்படி இடம் கிடைக்கவில்லை என்கிற மாதிரி சூழ்நிலை இருக்குமானால் அதற்குரிய விண்ணப்பங்களை நீங்கள் அளித்தால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த இடத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக முயற்சி செய்யும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *129*, திரு. டி.கே இராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.